# TNPSC தேர்வுகளுக்கான நடப்பு நிகழ்வுகள் - டிசம்பர் 2015

## தமிழகம்

❖ **நாட்டிலேயே மிக அதிகபட்சமாக தமிழ்நாட்டில் 36 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் செயல்பட்டு வருகின்றன. நாடெங்கிலும் தற்போது 204 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் செயல்பட்டு வருகின்றன.** மிக அதிகபட்சமாக தமிழ்நாட்டில் 36 சிறப்புப் பொருளாதார மண்டலங்களும், இதற்கு அடுத்தபடியாக தெலங்கானா, கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் தலா 26 சிறப்புப் பொருளாதார மண்டலங்களும் செயல்பட்டு வருகின்றன.

❖ தமிழ்நாட்டின் தலைமை தேர்தல் அதிகாரியாக, **ராஜேஸ் லக்கானி** அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இதற்கு முன்னர் அப்பொறுப்பில் இருந்த சந்தீப் சாக்சேனா அவர்கள் இந்திய தேர்தல் ஆணையத்தில், துணை தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ ராமநாதபுரம் மாவட்டம் ஆனந்தூர் அருகே சம்மந்த வயல் எனுமிடத்தில் **11 ஆம் நூற்றாண்டு புத்தர் சிலை** கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

❖ சென்னை விமான நிலையத்தில் தேங்கிய வெள்ளத்தால் , **அரக் கோணம் ஐ.என்.எஸ். கடற்படை விமானத் தளத்தை தற்காலிக விமான நிலையமாகப்** பயன்படுத்திக் கொள்ளப்பட்டது

❖ செட்டிநாடு குழுமங்களின் முன்னாள் தலைவரும் பிரபல தொழிலதிபருமான **எம்.ஏ.எம்.ராமசாமி 02-12-2015 அன்று காலமானார்.**

❖ **வாட்ஸ் அப் (Whatsup)** என்பதன் தமிழாக்கம் - **கட்- செவி அஞ்சல்**

❖ **நவீன தமிழ் நாடகத்தின் 'பீஷ்மர்'** என அழைக்கப்பட்ட நாடக மேதை, **எஸ்.ராமானுஜம்** அவர்கள் காலமானார்

❖ **மகாகவி பாரதியாரின் 134வது பிறந்த நாள் 11-12-2015** அன்று கொண்டாடப்பட்டது.

❖ இந்து கோயில்களில் **ஆகம விதிப்படியே அர்ச்சகர்களை நியமிக்க வேண்டும்** என உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

❖ கனடாவில் உள்ள, பிரிட்டிஷ் கொலம்பியா மாநில உயர்நீதிமன்ற நீதிபதியாக, தமிழகத்தை சேர்ந்த, **வள்ளியம்மை** நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ **தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக் கழகத்துக்கு யுஜிசி 12-பி அந்தஸ்து** கிடைத்துள்ளது. இதன்மூலம் இப்பல்கலைக்கழகம் யுஜிசி மற்றும் மத்திய அரசு துறைகளின் அனைத்து நிதியுதவிகளையும் தாராளமாக பெறலாம்.

❖ **'நான் மலாலா'** - புத்தகத்தின் ஆசிரியர் - பத்மஜா நாராயணன்

❖ திறன்மிகு பல்கலைக்கழகம் என்ற சிறப்பு அங்கீகார அந்தஸ் துக்கு (University with Potential for Excellence) **அண்ணா பல்கலைக்கழகம்** தேர்வுசெய்யப் பட்டிருப்பதாக யுஜிசி துணைத் தலைவர் எச்.தேவராஜ் அறிவித்தார். இதன்மூலம் அண்ணா பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பணிகளுக்கு ரூ.75 கோடி வரை யுஜிசி நிதியுதவி கிடைக்கும்.

❖ **தமிழகத்தில் அமையவிருக்கும் 12 பொலிவுறு நகரங்கள் (ஸ்மார்ட் சிட்டி) குறித்த திட்ட வரைவு அறிக்கையை தமிழக அரசு மத்திய அரசிடம் வழங்கியுள்ளது.** இந்தியா முழுவதும் 98 பொலிவுறு நகரங்களை அமைப்பதற்கு மத்திய அரசு முடிவு செய்தது. தமிழகத்தில் திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திண்டுக்கல், தஞ்சாவூர், திருப்பூர், சேலம், வேலூர், கோயம்புத்தூர், மதுரை, ஈரோடு, தூத்துக்குடி மற்றும் சென்னை ஆகிய நகரங்கள் பொலிவுறு நகரங்களாக மாற்றப்படவிருக்கின்றன.

❖ தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக **எஸ்.கீதாலட்சுமி** நியமிக்கப்பட்டுள்ளார்

❖ **தமிழறிஞர் தமிழண்ணல் 29-12-2015 அன்று, காலமானார்.** தமிழண்ணல், மதுரை காம ராஜர் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். மத்திய அரசின் செம்மொழி விருது, தமிழக அரசின் கலைமாமணி மற்றும் திரு.வி.க. விருது உள்ளிட்ட பல்வேறு விருதுகளை பெற்றவர்.

## இந்தியா

❖ **புதுதில்லியில் இருந்து அமெரிக்காவின் கலிஃபோர்னியாவில் உள்ள சான்ஃபிரான்சிஸ்கோ நகருக்கு நேரடி விமான சேவையை** ஏர் இந்தியா நிறுவனம் துவங்கியுள்ளது.

❖ உற்பத்தித் துறையின் வளர்ச்சி காரணமாக, நிகழ் நிதியாண்டின் இரண்டாவது காலாண்டில், **நாட்டின் பொருளாதார வளர்ச்சி 7.4 சதவீதமாக**

www.tnpscportal.in

**அதிகரித்துள்ளது**. இதன் மூலம், ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) **இந்தியா, சீனாவை விஞ்சியுள்ளது.**

❖ **தில்லி சட்டப்பேரவையில் லோக்பால் மசோதா தாக்கல்.** ஆம் ஆத்மி கட்சியின் மிக முக்கியமான வாக்குறுதிகளில் ஒன்றான "தில்லி லோக்பால்' மசோதாவை சட்டப்பேரவையில் துணை முதல்வர் மணீஷ் சிசோடியா தாக்கல் செய்தார்.

❖ **ராஞ்சி, நாக்பூர் மற்றும் பூனே** ஆகிய மூன்று இடங்களில் இந்திய தகவல் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தை ( Indian Institute of Information Technology-IIIT) உருவாக்க மத்திய அரசு முடிவெடுத்துள்ளது.

❖ மாசு அதிகரிப்பதை தடுக்கும் நோக்கில், "**டெல்லியில் இனிமேல் புதிதாக எந்த டீசல் வாகனங்களையும் பதிவு செய்யக் கூடாது**" என்று தேசிய பசுமை தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது. மேலும், மத்திய, மாநில அரசுகள் தங்கள் துறைகளுக்கு பயன்படுத்த டீசல் வாகனங்களை வாங்கக் கூடாது என்றும் அறிவுறுத்தி உள்ளது.

❖ **லோசர் திருவிழா (Losar festival)** ஜம்மு காஷ்மீரின் லடாக் பகுதியில் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகிறது.

❖ இந்திய அரசு நிறுவனமான **Hindustan Aeronautics Ltd 75 வது ஆண்டை நிறைவு செய்துள்ளது.**

❖ மத்திய வானிலை துறையின் டைரக்டர் ஜெனரல் - **எல்.எஸ்.ரத்தோர்**

❖ **கருப்பு பணம் வெளியேறும் நாடுகளின் பட்டியலில் இந்தியா நான்காவது இடத்தில் இருக்கிறது.** அமெரிக்காவை சேர்ந்த நிறுவனத்தின் அறிக்கை ஒன்று இந்த தகவலை வெளியிட்டிருக்கிறது

❖ இந்தியாவில் கார்கள் தயாரிப்பில் இரண்டாவது மிகப் பெரிய நிறுவனமாகத் திகழும் **ஹூண்டாய் நிறுவனம்** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்துடன் இணைந்து பாதுகாப்பு விழிப்புணர்வு பிரசா ரத்தைத் தொடங்கியுள்ளது.

❖ சமீபத்தில் ஐந்து புதிய மாவட்டங்களை உருவாக்கியுள்ள இந்திய மாநிலம் - **மேற்கு வங்கம்** (தற்போது ,புதிய மாவட்டங்களுடன் மொத்தம் 25 மாவட்டங்கள் உள்ளன)

❖ **"சார்க்' மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அடுத்த ஆண்டு செப்டம்பர் மாதம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பாகிஸ்தான் செல்லவுள்ளார். முன்னதாக**, கடந்த 2004-ஆம் ஆண்டில் பாகிஸ்தானில் நடைபெற்ற "சார்க்' மாநாட்டில் அப்போதைய பிரதமர் வாஜ்பாய் கலந்து கொண்டார். அதன் பிறகு 10 ஆண்டு காலம் பிரதமராக இருந்த மன்மோகன் சிங், பாகிஸ்தான் செல்ல விரும்பியபோதிலும் அதற்கான வாய்ப்புகள் அமையவில்லை.

❖ **தகவல் தொழில்நுட்பத் துறை பயன்பாட்டுக்கான சர்வதேச குறியீட்டில் இந்தியா 131-வது இடத்தில்** உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதே தொலைத்தொடர்பு கூட்டமைப்பு (ஐடியு) தெரிவித்துள்ளது.

❖ **காசோலை மசோதா நிறைவேற்றம்.** காசோலைகள் பணமின்றி திரும்புவது தொடர்பான வழக்குகளை, எங்கு காசோலை மாற்றப்படுவதற்காக போடப்பட்டதோ அப்பகுதியிலேயே பதிவு செய்யலாம்; காசோலை கொடுத்த இடத்தில் பதியக்கூடாது என்பதற்கு வகை செய்யும் மாற்றுமுறை ஆவண சட்ட திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

❖ **தெற்கு ரயில்வே இந்த ஆண்டிற்கான தேசிய அளவிலான மின் சிக்கனம் மற்றும் பாதுகாப்பு விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது.**

❖ மத்திய அரசு பணிக்கான **குரூப் சி மற்றும் பி (அரசிதழ் பதிவில்லாத) பதவிகளுக்கு நேர்காணல் நடத்துவதில்லை** ஆளும் பாரதீய ஜனதா கட்சி அறிவித்தது. இந்நிலையில் ஒரு சில பதவிகளுக்கு கட்டாயம் நேர்காணல் நடத்த வேண்டும் என சம்பந்தப்பட்ட துறை விரும்பினால், அதுகுறித்து மத்திய பணியாளர் நலத்துறை அலுவலகத்தில் முன் அனுமதி பெற வேண்டும் என **மத்திய பணியாளர் நலத் துறை இணை அமைச்சர் ஜித்தேந்திர சிங்** அறிவித்துள்ளார்.

❖ கர்நாடக லோக் ஆயுக்த நீதிபதி **பாஸ்கர்ராவ்** தனது பதவியை ராஜிநாமா செய்தார்.

❖ மத்திய சுற்றுசூழல் துறை அமைச்சர் **பிரகாஷ் ஜாவேட்கார்** (Prakash Javadekar)

❖ **GIAN - Global Initiative of Academic Networks** எனும் உயர்கல்வி மேம்பாட்டிற்கான புதிய திட்டத்தை மத்திய மனித வளத்துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி அவர்கள் துவக்கியுள்ளார்.

❖ **இந்தியாவில் உருவாக்குவோம் (Make in India) வாரம்** - பிப்ரவரி 23 முதல் துவங்கவுள்ளது.

❖ ஆண்டிற்கு 10 இலட்சம் ரூபாய்க்கு மேல் ஆண்டு வருமானமுடையவர்களுக்கு LPG சிலிண்டருக்கான சலுகை வழங்கப்படமாட்டாது என மத்திய அரசு அறிவித்துள்ளது.

❖ **புராஜெக்ட் லீப்** : பார்தி ஏர்டெல் நிறுவனம் அடுத்த 3 ஆண்டுகளில் 60 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்ய திட்ட மிட்டுள்ளது. தொலைத் தொடர்பு தகவல் பரிமாற்ற சேவைகளை மேம்படுத்த இந்த முதலீடுகளை மேற்கொள்கிறது. இதற்கு புராஜெக்ட் லீப் என பெயரிட் டுள்ளது. மார்ச் 2016 காலகட்டத்துக்குள் 60 சதவீத ஏர்டெல் நெட்வொர்க்குகளை மொபைல் பிராட்பேண்ட் சேவைக் குள் கொண்டுவருவது திட்டத்தின் ஒரு பகுதி என்று கூறியுள்ளது.

❖ **தூய்மை இந்தியா திட்டத்திற்கான பாடலை** கோவா ஆளுநர் மிருதுலா சின்கா அவர்கள் இயற்றியுள்ளார்.

❖ 2000 பள்ளி மாணவர்கள் ஒரே நேரத்தில் பங்கு பெற்ற மிகப்பெரும் அறிவியல் சோதனையை நடத்தி **டில்லி ஐ.ஐ.டி கின்னஸ் சாதனை** படைத்துள்ளது.

❖ முன்னாள் பிரதமர் **ராஜீவ் காந்தி கொலை வழக்கு** குற்றவாளிகளை விடுதலை செய்யும் அதிகாரம் மத்திய அரசுக்கு மட்டும் தான் உள்ளது என்று உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு அதிரடியாகத் தீர்ப்பு வழங்கியுள்ளது.

❖ **சர்வதேச சூரிய சக்தி கூட்டமைப்பு (International Solar Alliance (ISA))**எனும் புதிய அமைப்பை **பிரதமர் மோடி** அவர்கள் பாரிஸ் காலநிலை கூடுகையில் அறிவித்துள்ளார். இதன் தலைமையிடம் **தேசிய சூரிய ஆற்றல் நிறுவனம், கூர்கானில்** இருந்து செயல்படும் எனவும் அறிவித்துள்ளார்.

❖ இந்தியாவில் முதன் முறையாக 'பயோ - டீசல்' இன்ஜின் மூலம் இயங்கும் விரைவு ரயில் கர்நாடக மாநிலம் **ஹூப்ளி - பெங்களூரு** இடையே இயக்கப்பட்டது.

❖ பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாதில் **"ஆசியாவின் இதயம்'** என்ற பெயரில் ஆப்கானிஸ்தான் தொடர்பான மாநாடு, டிசம்பர் 9 ல்

நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் இந்தியக் குழுவினருடன் **சுஷ்மா ஸ்வராஜ்** கலந்து கொண்டார்.

❖ நேதாஜியின் கடைசி நாட்கள் பற்றிய அரிய தகவல்களை இலண்டனில் வாழும் அவரது உறவினர் ஆசிஸ் ராய் என்பவர் www.bosefiles.info எனும் இணையதளம் மூலம் வெளியிட்டு வருகிறார்.

❖ **'Life on my terms'** என்ற நூலின் ஆசிரியர் - சரத் பவார்

❖ **'The Bose brothers and Indian Independence - an insiders account'** - மாதுரி போஸ்

❖ **இந்தியாவின் முதல் புல்லட் ரயில் மும்பை-ஆமதாபாத்** இடையே இயக்கப்பட இருக்கிறது. இதற்காக **ஜப்பான்** நாட்டுடன் விரைவில் ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளது. இந்தத் திட்டம் ஜப்பான் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட இருக்கிறது

❖ இமயமலைத் தொடர் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைகள் உள்பட 8 இடங்களில் சுற்றுச்சூழல் கண்காணிப்பு மையங்களை இந்தியா அமைக்கும் என்று மத்திய **சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பிரகாஷ் ஜாவடேகர்** தெரிவித்தார்.

❖ அமெரிக்காவின் நலனை கருத் தில் கொண்டே இந்தியா வளர்ச்சி அடைய தேவையான உதவி களை செய்து வருகிறோம் என அமெரிக்க அதிபர் **பராக் ஒபாமா** வெளிப்படையாக தெரிவித் துள்ளார்.

❖ சரக்கு மற்றும் சேவை வரியை (ஜிஎஸ்டி) 15 சதவீதத்திலிருந்து 15.5 சதவீதம் வரை விதிக்கலாம் என்று **தலைமை பொருளாதார ஆலோசகர் அர்விந்த் சுப்ரமணியன்** தலைமை வகித்த குழு பரிந்துரை செய்துள்ளது

❖ திருப்பதியில் உள்ள பிரசித்திபெற்ற **ஸ்ரீ கோதண்டராம சுவாமி** கோயில் **சோழர்** காலத்தில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

❖ பிகாரில் பொதுச் சுகாதாரம், கர்ப்பிணிகள் நலன், குழந்தைகளின் ஆரோக்கியம் ஆகியவற்றை மேம்படுத்த மாநில அரசுடன் இணைந்து பணியாற்றுவது தொடர்பாக, மைக்ரோசாஃப்ட் நிறுவனரும், பில் அண்ட் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையின் துணைத் தலைவருமான **பில் கேட்ஸ்**, அந்த மாநில முதல்வர் **நிதீஷ்குமாரை** சந்தித்துப் பேசினார்

❖ இந்தியாவில் எரிவாயு உருளைக்கு நேரடி மானியம் அளிக்கும் திட்டத்தை, உலகிலேயே மிகப் பெரிய பணப் பரிமாற்றத் திட்டமாக அங்கீகரித்து, **கின்னஸ்**

**சாதனை அமைப்பு சான்றிதழ்** வழங்கியுள்ளது. அந்தச் சான்றிதழை பிரதமர் நரேந்திர மோடியிடம் பெட்ரோலியத் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் ஒப்படைத்தார்.

❖ மகாராஷ்டிர மாநில **"ஷேத்காரி சங்கடனா'** என்ற விவசாயிகள் அமைப்பின் நிறுவனரான சரத் ஜோஷி காலமானார்.

❖ இந்தியாவுக்கு வரும் அந்நிய நேரடி முதலீடு பட்டியலில் **சிங்கப்பூர் முதல் இடத்தில் உள்ளது.**

❖ காணாமல் போன குழந்தைகளை கண்டுப்பிடித்து அவர்களது பெற்றோர்களிடம் சேர்பதற்கான **'ஆபரேசன் ஸ்மைல்'** திட்டம் மீண்டும் ஜனவரி மாதம் தொடங்கும் என மத்திய அரசு அறிவித்துள்ளது

❖ அமில தாக்குதலுக்கு (acid attacks) உள்ளானவர்களுக்கு இலவச சிகிச்சை வழங்க வேண்டும் என உச்சநீதிமன்றம் மாநில அரசுகளை வலியுறுத்தியுள்ளது.

❖ **இந்திரா நேவி -15 (INDRA NAVY-15)** எனப்படுவது, இந்தியா மற்றும் ரஷியா நாடுகளுக்கிடையேயான கூட்டு கடற்படை பயிற்சியாகும். இந்த ஆண்டு விஷாகபட்டினத்தில் நடைபெறும் இப்பயிற்சி எட்டாவது முறையாகும்.

❖ **டாக்டர் அம்பேத்கரின் 125 வது பிறந்த தினத்தை** முன்னிட்டு 125 மற்றும் 10 ரூபாய் நாணயங்களை பிரதமர் 6-12-2015 அன்று வெளியிட்டுள்ளார்.

❖ இந்தியாவின் முதன்மை பொருளாதார ஆலோசகர் - **அரவிந்த் சுப்ரமணியன்**

❖ **சுகம்யா பாரத் அபியான்** (Sugamya Bharat Abhiyan (Accessible India Campaign)) என்பது மத்திய அரசினால மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக அறிமுகம் செய்யப்பட்டுள்ள திட்டமாகும்.

❖ **உள்ளாட்சித் தேர்தல் வேட்பாளருக்கு கல்வித் தகுதி ஹரியாணா அரசின் சட்டம் செல்லும் - உச்ச நீதிமன்றம் தீர்ப்பு** - ஹரியாணா பஞ்சாயத்து ராஜ் (திருத்தம்) சட்டம் 2015 இந்த ஆண்டு இயற்றப்பட்டது. இதன் படி, உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிடும் பொது (ஆண்) வேட்பாளர்கள் குறைந்தப்பட்சம் 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பெண் (பொது) மற்றும் ஆதிதிராவிடர் (எஸ்சி) இனத்தைச் சேர்ந்த ஆண் வேட்பாளர்களாக இருந்தால் 8-ம் வகுப்பும் பெண் ணாக இருந்தால் 5-ம் வகுப்பும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதுபோல மேலும் சில கடுமை யான கட்டுப்பாடுகள் விதிக்க இந்த சட்டம் வகை செய்கிறது.

www.tnpscportal.in

❖ **காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாடு அமைப்பின் (ஐஆர்டிஏ) - தலைவர்** விஜயன்

❖ தொழில்நுட்ப அடிப்படையிலான ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் உருவாவதில் சர்வதேச அளவில் **இந்தியா மூன்றாவது இடத்தில்** உள்ளது என்று கூகுள் தெரிவித்துள்ளது.

❖ நாட்டின் **முதல் டிஜிட்டல் மாநிலமாக கேரளா** அறிவிக்கப்படவுள்ளது

❖ **கார்பன் வெளியீட்டில், (தனி நபர் கார்பன் வெளியீட்டு அளவில்) இந்திய மாநிலத் தலைநகரங்களில் சென்னை முதலிடத்தில்** உள்ளதாக இந்திய அறிவியல் ஆராய்ச்சி நிறுவன ஆராய்ச்சியாளர் டி.வி.ராமசந்திரன் கூறியுள்ளார். சென்னையை அடுத்து, கல்கத்தா இரண்டாமிடத்திலுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖ **ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே, 3 நாள் அரசுமுறைப் பயணமாக சனிக்கிழமை இந்தியா வந்தார்**. இந்தப் பயணத்தின்போது, இந்தியாவின் முதல் அதிவிரைவு ரயில் திட்டம் (புல்லட் ரயில்) உள்ளிட்டவை தொடர்பான பல முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

❖ யமுனை நதியில் நோய்த் தடுப்பு மூலக்கூறுகள் அதிக அளவில் இருப்பதாக மருத்துவச் சோதனையில் கண்டறியப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

❖ **கங்கை நதியைத் தூய்மைப்படுத்தும் நடவடிக்கையாக**, கோமுக் பகுதி முதல் ஹரித்வார் பகுதி வரை, **பிளாஸ்டிக் பொருள்களைப் பயன்படுத்துவதற்கு தேசிய பசுமைத் தீர்ப்பாயம் தடை விதித்துள்ளது.**இந்தத் தடை உத்தரவு, வரும் பிப்ரவரி 1-ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வருகிறது.

❖ சிபிஐ இயக்குநர் - **அனில் சின்ஹா**

❖ முன்னாள் கிரிக்கெட் வீரரும் பாகிஸ்தானின் தெக்ரிக்-இ-இன்சாப் கட்சியின் தலைவருமான **இம்ரான் கான் பிரதமர் மோடியை 11-12-15 அன்று புதுதில்லியில் சந்தித்து பேசினார்.**

❖ **இந்தியாவில் தயாரிப்போம்' திட்டம் ஜப்பான் நாட்டில் ஓர் இயக்கமாகவே செயல்படுகிறது** இதற்காக 12 பில்லியன் அமெரிக்க டாலர்களை ஜப்பான் அரசு ஒதுக்கியுள்ளது என்று பிரதமர் மோடி அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

❖ **விஜயவாடாவில்** 12-12-2015 **அன்று ராஜ்நாத் தலைமையில் தென்மண்டல முதல்வர்கள் மாநாடு** நடைபெற்றது. இந்த மாநாட்டில் தமிழகம், கர்நாடகம், கேரளம், ஆந்திரப் பிரதேசம், தெலங்கானா, புதுச்சேரி ஆகிய மாநிலங்களின் முதல்வர்கள்/பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

❖ புதுச்சேரியில் உள்ள பிரெஞ்ச் இன்ஸ்டிடியூட் மூலம் எட்டயபுரத்தில் உள்ள **பாரதியாரின் கடிதங்கள் உள்ளிட்ட ஆவணங்களை டிஜிட்டல்மயமாக்க தில்லியில் உள்ள பிரான்ஸ்** நாட்டு தூதர் ஒப்புக் கொண்டுள்ளதாக மாநிலங்களவை பாஜக உறுப்பினர் தருண் விஜய் தெரிவித்தார்.

❖ மும்பை - அகமதாபாத் இடையே ரூ.98 ஆயிரம் கோடி செலவில் **அதிவேக ரயில் (புல்லட் ரயில்)** திட்டத்தை செயல்படுத்துவது தொடர்பான ஒப்பந்தம், பிரதமர் மோடி - ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே முன்னிலையில் கையெழுத்தானது. இந்த திட்டம் செயல்பாட்டுக்கு வந்தால், 505 கி.மீ. தூரம் கொண்ட இந்த இரு நகரங்களுக்கிடையிலான பயண நேரம் 8 மணியிலிருந்து வெறும் 3 மணி நேரமாகக் குறையும்.

❖ நாடாளுமன்றத்தின் மீது பாகிஸ்தானைச் சேர்ந்த பயங்கரவாதிகள் கடந்த 2001-ஆம் ஆண்டு நடத்திய தாக்குதல் சம்பவத்தின் **14ஆம் ஆண்டு நினைவு தின**த்தையொட்டி, அந்த தாக்குதலில் உயிரிழந்த பாதுகாப்புப் படை வீரர்கள் உள்ளிட்டோருக்கு பிரதமர் நரேந்திர மோடி மற்றும் எம்.பி.க்கள் 13-12-2015 அன்று மரியாதை செலுத்தினர்.

❖ கடந்த காலத் தவறுகளுக்காக அஸ்ஸாம் மாநில மக்களிடம் **உல்ஃபா தீவிரவாத அமைப்பின் தலைவர் அனுப் சேத்தியா** மன்னிப்புக் கோரினார்.

❖ சென்னை - மைசூரு இடையே யான சதாப்தி விரைவு ரயில் 'பயோ டீசல்' என்ஜின் மூலம் இயக்கப்பட்டது. நீராவி, நிலக்கரி, மின்சாரம் மூலம் இயக்கப்பட்டு வந்த ரயில் தற்போது 'பயோ- டீசல்' (உயிரி எரிபொருள்) மூலம் இயக்கப்பட்டு வருகிறது. **நாட்டிலே முதல்முறையாக பயோ டீசல் என்ஜின் மூலம் இயங்கும் விரைவு ரயில் (ஜன சதாப்தி) கர்நாடக மாநிலம் ஹுப்ளி பெங்களூரு** இடையே கடந்த சில தினங்களுக்கு முன்பு இயக்கப்பட்டது.

❖ 2014 முதல் 2015 வரையிலான காலகட்டத்தில் மத்திய அரசுப் பணிகளில் பணியமர்த்தப்பட்டோரில் 8.79 சதவீதம் பேர் அல்லது 11,218 பேர் **சிறுபான்மையினர்** என்று மாநிலங்களவையில் தெரிவிக்கப்பட்டது.

❖ ஹரிகோட்டா சதீஷ் தவாண் விண்வெளி ஆய்வு மைய இயக்குநர் **பி.குன்னி கிருஷ்ணன்**

❖ திருவனந்தபுரம் விக்ரம்சாராபாய் விண்வெளி ஆய்வு மைய இயக்குநர் **சிவன்**

❖ செபி (SEBI) தலைவர் **யு.கே.சின்ஹா**

❖ மத்திய அரசின் "**தூய்மை இந்தியா**' திட்டத்துக்கு ரூ. 10 ஆயிரம் கோடி கடனுதவி அளிக்க **உலக வங்கி** ஒப்புதல் அளித்துள்ளது.

❖ "இந்தியாவில், அடுத்த ஓராண்டில், 100 ரயில் நிலையங்களில், '**வை - பை**' வசதி ஏற்படுத்தப்படும்," என, **கூகுள்** நிறுவன தலைமை செயல் அதிகாரி சுந்தர் பிச்சை தெரிவித்துள்ளார்

❖ **திருநங்கைகளை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில்** சேர்க்க தெலங்கானா அரசு திட்டமிடப்பட்டுள்ளது.

❖ **2016-ம் ஆண்டு பிப்ரவரி 13-ம் தேதி `மேக் இன் இந்தியா' வாரம்** மும்பையில் நடத்தப்பட இருக்கிறது. இதை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைக்க இருக்கிறார்.

❖ **'ஃபோர்ப்ஸ்' பத்திரிகை வெளியிட்டுள்ள தொழில் தொடங்க சிறந்த நாடுகளின் பட்டியலில் இந்தியாவுக்கு 97-ஆவது இடமே கிடைத்துள்ளது.** பட்டியலில் டென்மார்க் முதலிடம் பெற்றுள்ளது. நியூஸிலாந்து, நார்வே, அயர்லாந்து, ஸ்வீடன் ஆகியவை முறையே 2 முதல் 5-ஆவது இடம் வரை பிடித்துள்ளன. சிங்கப்பூர் 8-ஆவது இடத்திலும், பிரிட்டன் 10-ஆவது இடத்திலும் உள்ளன. அமெரிக்கா 4 இடங்கள் பின்தங்கி 22-ஆவது இடத்தில் உள்ளது.

❖ **எருமைகள் விருத்தி அடைய வேண்டி தோடர்கள் கொண்டாடும் 'மொற் பர்த்'பண்டிகை** உதகை நீலகிரி மாவட்டத்தில் குரும்பர், இருளர், காட்டு நாயக்கர், பனியர், தோடர், கோத்தர் ஆகிய 6 பண்டைய பழங்குடியினர் வசிக்கின்றனர்.தோடரின மக்களின் முக்கிய அங்கமாக வகிப்பது எருமைகள்.



www.tnpscportal.in

கால்நடை பராமரிப்பாளர்களான இவர்கள், பால் பொருட்களை உட்கொள்ளும் சைவர்கள். தங்க ளின் அனைத்து இறை வழிபாடுகள் மற்றும் விசேஷங்களில் எருமை களுக்கு முதலிடம் அளிக்கின்றனர். அத்தகைய எருமைகள் விருத்தி அடைய வேண்டும், தங்கள் வாழ்வு வளம் பெற வேண்டும் என வேண்டி, மார்கழி மாதம் இவர்கள் கொண்டாடும் பண்டிகை 'மொற் பர்த்'.

❖ கொடுமையான குற்றச் செயல்களில் ஈடுபடும் 16 முதல் 18 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை வயது வந்தோராகக் கருதி, தண்டனை அளிக்க வகை செய்யும் சிறார் நீதி (குழந்தைகள் மீதான அக்கறை மற்றும் பாதுகாப்பு) சட்ட திருத்த மசோதா மாநிலங்களவையில் நிறைவேறியது.

❖ **சென்னை ஐஐடி-யில் புதிதாக ரயில்வே ஆராய்ச்சி மையம்** அமைக்கப்பட இருக்கிறது. இங்கு ஆய்வுப் பணிகளுடன் ரயில்வே தொழில்நுட்பம் சம்பந்தப்பட்ட பல்வேறு படிப்புகளும் வழங்கப்பட உள்ளன.

❖ **ஓரினச்சேர்க்கை**யில் ஈடுபடுவதை குற்றமாகக் கருதக்கூடாது என்று கூறி காங்கிரஸ் மூத்த தலைவர் **சசி தரூரால்** மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட **தனிநபர் மசோதா** அறிமுக நிலையிலேயே தோல்வி அடைந்தது. ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுவதை தண்டனைக்குரிய குற்றமாகக் கருதும் இந்திய தண்டனையியல் சட்டத்தின் 377-ஆவது பிரிவில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, அதற்கு மாற்றாக மற்றொரு பிரிவு உருவாக்கப்பட வேண்டும் என்று காங்கிரஸ் மூத்த தலைவர் சசி தரூர், மக்களவையில் தனிநபர் மசோதாவை தாக்கல் செய்தார்.

❖ **உலக அமைதிக்காக** தெலங்கானா முதல்வர் கே. சந்திரசேகர ராவ் **மகா சண்டி யாகத்தை** நடத்தினார்.

❖ **பிரதமர் நரேந்திர மோடி** 23-12-2015 அன்று, **ரஷ்ய பயணம்** மேற்கொண்டார்.கடந்த 2001-ம் ஆண்டுதான் இந்தியா - ரஷ்யா இடையிலான முதல் மாநாடு நடந்தது.

❖ தில்லி கிரிக்கெட் சங்கத்தில் நடைபெற்றதாக கூறப்படும் நிதி முறைகேடுகள் குறித்து விசாரணை நடத்துவதற்கு முன்னாள் தலைமை சட்ட ஆலோசகர் **கோபால் சுப்பிரமணியம்** தலைமையில் ஆணையத்தை அமைத்து தில்லி ஆம் ஆத்மி அரசு அமைத்துள்ளது.

❖ **சென்னையில் உள்ள இன்சூரன்ஸ் குறைதீர்ப்பாளர் (ஆம்புட்ஸ்மேன்)** கடந்த 2014-15-ம் ஆண்டில் 1,527 புகார்களுக்கு தீர்வு கண்டுள்ளதால் தேசிய அளவில் முதலிடத்தைப் பிடித்துள்ளது. வங்கி சேவைகள் தொடர்பான புகார்களை அளிப்பதற்காக வங்கி குறைதீர்ப்பாளர் இருப்பதுபோல் இன்சூரன்ஸ் சேவை தொடர்பான புகார்களை அளிக்க காப்பீட்டு குறை தீர்ப்பாளர் உள்ளார். 1998-ம் ஆண் டில் இன்சூரன்ஸ் ஆம்புட்ஸ்மேன் ஏற்படுத்தப்பட்டது.

❖ 15 ஆண்டுகள் பழமையான டீசல் வாகனங்களுக்கு பீகார் தலைநகர் பாட்னாவில் தடை செய்து அம்மாநில முதல்வர் நிதிஷ்குமார் உத்தரவிட்டுள்ளார்.

❖ **'கம்பளா' விளையாட்டு** : கர்நாடகத்தில் உச்ச நீதிமன்ற உத்தரவை மீறி 'கம்பளா' (எருமை ஓட்டப் பந்தயம்) போட்டி நடை பெறுகிறது. தட்சின கன்னடா, உத்தர கன் னடா, உடுப்பி ஆகிய மாவட்டங் களில் துளு மொழி பேசும் மக்கள் அதிகளவில் வாசிக்கின்றனர். இவர்கள் தமிழகத்தில் நடைபெறும் ஜல்லிக்கட்டு போல, தங்களது குலதெய்வங்களுக்கு நன்றி தெரி விக்கும் வகையில் ஆண்டுதோறும் நவம்பர் முதல் மார்ச் மாதம் வரையில் 'கம்பளா' விளையாட்டு போட்டியை நடத்துகின்றனர். கம்பளா போட்டியின்போது உழுத நிலையில் இருக்கும் வயலில் இரு ஆண் எருமைகளை ஏரில் பூட்டி வீரர்கள் வேகமாக விரட்டுவார்கள். செம்மண் சேரும், செம்புல நீரும் தெறிக்க எருமைகள் சீறிப் பாய்ந்து வருவதை பார்வை யாளர்கள் வரப்புகளில் நின்று கண்டு ரசிப்பார்கள்.

❖ **பார்ச்சூன் 500 இந்தியா: முதலிடத்தில் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன்** : 2015-ம் ஆண்டிற்கான வருவாய் அடிப்படையில் தொழில் நிறுவ னங்களின் பட்டியலை `பார்ச்சூன் 500 இந்தியா' என்ற தலைப்பில் பார்ச்சூன் இதழ் வெளியிட்டுள்ளது. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் (ஐஓசி) நிறுவனம் இந்தப் பட்டி யலில் முதலிடத்தில் உள்ளது. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தைத் தொடர்ந்து முகேஷ் அம்பானி நடத்தி வரும் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் இந்தப் பட்டியலில் இரண்டாமிடத்தில் இருக்கிறது. டாடா மோட்டார்ஸ் நிறுவனம் மூன்றாமிடத்தில் உள்ளது.

❖ **வாஜ்பாய் பிறந்த நாளான டிசம்பர் 25 அன்று, அவரது பெயரிலான ஆப்கானிஸ்தான் நாடாளுமன்ற கட்டடத்தை திறந்து வைத்தார் பிரதமர்**

www.tnpscportal.in

**மோடி** : ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் நகருக்கு முதல் முறையாக சென்றுள்ள பிரதமர் நரேந்திர மோடி, அங்கு புதிதாக அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற கட்டடத்தை திறந்து வைத்தார்.ஆப்கானிஸ்தானில் இந்தியா 90 மில்லியன் அமெரிக்க டாலர்கள் செலவில் புதிய பாராளுமன்ற கட்டடத்தை கட்டியுள்ளது. புதிய பாராளுமன்றத்தில் கீழ்-சபை, மேல்-சபை மற்றும் கலந்துரையாடல் கூடம் ஆகியவை இடம்பெற்று உள்ளது.

- இந்திய பிரதமர் **நரேந்திர மோடி 25-12-2015 அன்று, திடீர் பயணமாக பாகிஸ் தான் சென்றார்.** அங்கு அந்த நாட்டு பிரதமர் நவாஸ் ஷெரீபை சந்தித்து முக்கிய ஆலோசனை நடத்தினார். மேலும் பாகிஸ்தானின் தந்தை முகமது அலி ஜின்னாவின் 139-வது பிறந்த தினத்திற்கும் பிரதமர் மோடி வாழ்த்து கூறினார்.
- சுனாமி பாதிக்கப்பட்டு (26-12-2004) 11 வது ஆண்டு நினைவு தினம் 26-12-2015 அன்று அனுசரிக்கப்பட்டது.

- சூரிய மின்சக்தியின் முக்கியத்து வத்தை உணர்த்தும் வகையில் நாட்டிலேயே முதல் முறையாக ரூ. 30 கோடி செலவில் சூரிய மின் சக்திக்கான குவிமாடம் கொல்கத் தாவில் அமைக்கப்படவுள்ளது.
- தமிழக முன்னாள் முதல்வர் அண்ணா குறித்து '**அண்ணா அருமை அண்ணா**' என்ற நூலை விஐடி வேந்தர் **ஜி.விசுவநாதன்** எழுதியுள்ளார்.
- **புலவர் மா.நன்னன் எழுதிய சமீபத்திய நூலின் பெயர்** - 'நல்ல உரைநடை எழுத வேண்டுமா?'
- இந்தியக் கடற்படையில் உள்ள போர்க் கப்பல்களுக்கு இடையே மும்பையில் நடைபெற்ற போட்டியில், **"ஐஎன்எஸ் விராட்'** வெற்றி வாகை சூடியது.
- **நாட்டிலேயே முதன்முறையாக**, கடந்த 2010-ம் ஆண்டு **குஜராத்தில்** நடந்த 6 மாநகராட்சித் தேர்த லில் **இணையதளம் வழியாக வாக்களிக்கும் முறை** அறிமுகம் செய்யப்பட்டது.சமீபத்தில் நடந்த 6 மாநகராட்சித் தேர்தலிலும் 2-வது முறையாக இந்த வசதி வழங்கப்பட்டது.

- **ஆசியாவிலேயே ஊடகவியலா ளர்களுக்கு ஆபத்தான நாடாக இந்தியா விளங்குவதாக ஊடக கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.**

www.tnpscportal.in

பிரான்ஸில் செயல்படும் எல்லையற்ற செய்தியாளர்கள் (ரிப்போர்ட்டர்ஸ் வித்தவுட் பார் டர்ஸ்) அமைப்பு ஆண்டறிக் கையை வெளியிட்டுள்ளது. அதில் கூறியிருப்பதாவது: இந்த ஆண்டில் சர்வதேச அளவில் 110 பத்திரிகையாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். இதில் இந்தியாவில் மட்டும் 9 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

❖ **ரயில்வே ஒழுங்குமுறை ஆணையத்தின் பெயர், ரயில்வே மேம்பாட்டு ஆணையமாக பெயர் மாற்றப்பட உள்ளது**. மேலும், பயணிகள் மற்றும் சரக்குக் கட்டணத்தை நிர்ணயிப்பது தவிர பல்வேறு மேம்பாட்டுப் பணிகளிலும் இந்த ஆணையம் ஈடுபட உள்ளது.

❖ 2030-ம் ஆண்டுக்கு பிறகு உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக இந்தியா இருக்கும் என்று இங்கிலாந்தை சேர்ந்த தொழில் பொருளாதார ஆய்வறிக்கை மையம் (சிஇபிஆர்) தெரிவித்துள்ளது. 2019-ம் ஆண்டில் காமன்வெல்த் நாடுகளில் மிகப் பெரிய பொருளாதாரத்தை கொண்ட நாடாக இந்தியா இருக்கும். அப்போது இங்கிலாந்து பொருளாதாரத்தை விட இந்தியா பெரியதாக இருக்கும்.

❖ **பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசின் திட்டங்கள் -ஒரு பார்வை (நன்றி : தி இந்து)**

○ **<u>ஜன் தன் யோஜனா</u>** : இந்தியாவில் உள்ள அனைத்து மக்களுக்கும் வங்கிக் கணக்கை ஏற்படுத்தி தரும் திட்டமாகும். 2014-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தொடங்கப்பட்டது. இந்த வங்கி கணக்கு மூலம் ரூபே டெபிட் கார்ட் மற்றும் ஒரு லட்சம் மதிப்புள்ள சிறப்பு விபத்துக் காப்பீடு வழங்கப்படுகிறது. 30,000 ரூபாய் மதிப்புள்ள ஆயுள் காப்பீடும் வழங்கப்படுகிறது.

○ **<u>மேக் இன் இந்தியா</u>** : இந்தியாவை உற்பத்தி கேந்திரமாக மாற்ற தொடங்கப்பட்ட திட்டம். மத்திய அரசின் தகவல் படி இத்திட்டத்தால் அந்நிய நேரடி முதலீடு அதிகரிப்பு 48% . 25 துறைகளை பட்டியலிட்டு இந்தியாவில் தயாரிக்க வாருங்கள் என்று பிரதமர் மோடி அழைப்பு விடுத்தார்.

○ **<u>திறன் மிகு இந்தியா</u>** : 2022-ஆம் ஆண்டிற்குள் 40 கோடி இந்தியர்களை பல்வேறு துறைகளில் திறமை மிக்கவர்களாக மாற்றுவோம் என்று இலக்கோடு தொடங்கப்பட்ட திட்டம்.

○ **<u>தூய்மை இந்தியா</u>** : 2019-ம் ஆண்டிற்குள் இந்தியாவை தூய்மையானதாக மாற்ற வேண்டும் என்பது இலக்கு. 2019-ம் ஆண்டிற்குள் 1 கோடி கழிப்பறைகளை கட்ட வேண்டும் என்கிற இலக்கும் இந்த திட்டத்தில் உள்ளது.

○ **<u>இந்திர தனுஷ்</u>** : மஞ்சள் காமாலை, காச நோய், போலியோ போன்ற நோய்கள் குழந்தைகளுக்கு வராமல் தடுக்க தடுப்பூசி போடுவதற்காக தொடங்கப்பட்ட திட்டம். முதல்கட்டமாக நாடு முழுவதும் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்ட மாவட்டங்கள் 201

○ **<u>முத்ரா திட்டம்</u>** : சிறுகுறு தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்கவும், மேம்படுத்தவும் வங்கி கடன் வழங்குவதற்காக 2014-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கப்பட்டது. சிசு, கிஷோர், தருண் ஆகிய மூன்று பிரிவுகளில் சிறு முதலீட்டாளர்களுக்கு கடன் வழங்கப்பட்டு வருகிறது.

○ **<u>டிஜிட்டல் இந்தியா</u>** : பொருளாதார அறிவை வளர்க்கவும் இந்திய சமூகத்துக்கு டிஜிட்டல் சேவையை அளிக்கவும் ஆரம்பிக்கப்பட்டது. 4.5 லட்சம் கோடி ரூபாய் முதலீடு வர இருப்பதாக அறிவித்தார். திட்டத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் பேஸ்புக் நிறுவனர் மார்க் ஜுகர்பெர்க் தனது புரொபைல் படத்தை இந்தியாவின் மூவர்ண கொடியோடு சேர்த்து இருந்த படமாக மாற்றிக் கொண்டார்.

○ **<u>ஸ்மார்ட் சிட்டி</u>** : நாடு முழுவதும் 100 நகரங்களை தேர்ந்தெடுத்து அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி தருவதே ஸ்மார்ட் சிட்டியின் நோக்கம். பொருளாதார வளர்ச்சி, சுத்தமான காற்று, போக்குவரத்து வசதிகளும் இதில் அடங்கும். 2015-16 பட்ஜெட்டில் இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ.48,000 கோடி. தமிழகத்தில் 12 நகரங்களை ஸ்மார்ட் சிட்டியாக மாற்ற மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

❖ **மகளிருக்கென பிரத்யேக மதுபான விற்பனையகம்**. கிழக்கு தில்லியில் உள்ள ஸ்டார் சிட்டி மாலில் மகளிருக்கென பிரத்யேக மதுபான விற்பனையகம் திறக்கப்பட்டுள்ளது.

❖ மராத்திய கவிஞர் மற்றும் இலக்கியவாதியான **மங்கேஷ் கேஷவ் பட்கோங்கர் காலமானார்.**இந்திய ராணுவத்தின் 13-வது தலைமைத்

தளபதியாக, 1978-ஆம் ஆண்டு முதல் 1981-ஆம் ஆண்டு வரை பதவி வகித்த மல்ஹோத்ரா காலமானார்.

❖ **கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் ஸ்ரீபக்த ஆஞ்சநேயர் கடை லட்டு** : ஆந்திர மாநிலம் கிழக்குக் கோதாவரி மாவட்டம் தவளேஸ்வரத்தில் உள்ளது ஸ்ரீபக்த ஆஞ்சநேயர் இனிப்பகம். இதன் உரிமையாளர் சீனுபாபு கடந்த 5 ஆண்டுகளாக விநாயகர் சதுர்த்தியன்று மிகப் பெரிய லட்டை தயாரித்து தொடர்ந்து கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்று வருகிறார்.

❖ **நாட்டிலேயே முதல் முறையாக** சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆன்லைன் மூலமாக கேள்விகள் தொடுக்கும் முறைமையை மஹாராஷ்டிர அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

❖ **யோகா மற்றும் இயற்கை மருத்துவத்திற்கான மத்திய ஆராய்ச்சி நிறுவனம்** ஒடிஷா மாநிலத்தின் கோர்தா மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ளது. ஏற்கனவே புது தில்லியில் **மொரார்ஜி தேசாய் தேசிய யோகா கல்வி நிறுவனம்** செயல்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

❖ இந்தியா-இங்கிலாந்து நாடுகளுக்கிடையேயான உறவைப்பொறுத்த வரையில், **2016 ஆம் ஆண்டானது கல்வி, ஆராய்ச்சி மற்றும் புதுமைகளுக்கான ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

❖ **இந்திய தர நிர்ணய மசோதா , 2015 மக்களவையில் நிறைவேறியது. இதன்படி இந்திய தர நிர்ணய சட்டம் 1986 யில் மாறுதல்கள் செய்யவும், Bureau of Indian Standard என்பதை National Standard Body of India என மாறுதல் செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.**

❖ **முதல் சர்வதேச பறவைகள் விழா** ஆக்ராவிலுள்ள சம்பல் பறவைகள் சரணாலயத்தில் உத்தரபிரதேச அரசால் கொண்டாடப்பட்டது.

❖ Zoological Survey of India (ZSI) ன் நூறாண்டை அனுசரிக்கும் வகையில் மத்திய அரசு தபால் தலையை வெளியிட்டுள்ளடது.

❖ பொருட்கள் மற்றும் சேவைகள் வரி ( ஜி.எஸ்.டி) தொடர்பான குழுவின் தலைவர் - அரவிந்த் சுப்ரமணியன்.

❖ SHE AUTOS எனும் பெயரில் பெண்களை ஆட்டோ ஓட்டுநர்களாக ஊக்குவிக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ள மாநிலம் - ஆந்திரபிரதேசம்

❖ **'சப்லா திட்டம்' (SABLA Scheme)** - 11 முதல் 18 வயதான வளர் இளம் பெண்களின் சத்துணவு, ஆரோக்கியம் மற்றும் கல்வி மேம்பாட்டிற்கானது.

❖ **ஐ.நா வின் சர்வதேச மனிதவள மேம்பாட்டு பட்டியலில் (Human Development Index) இந்தியா 130 வது இடத்திலுள்ளது.** முதலிடத்தில் நார்வே நாடு உள்ளது.

❖ **இந்திய**-ஜப்பான் இடையே இரட்டை வரிவிதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது.

❖ **காணாமல் போகும் குழந்தைகளின் மீட்பு மற்றும் மறுவாழ்விற்கான, ஆப்ரேஷன் ஸ்மைல் திட்டத்தின் இரண்டாம் கட்டம் ஜனவரி 1, 2016 முதல் ஆரம்பமாகவுள்ளது.**

❖ தேசிய உணவு பாதுகாப்பு சட்டம், 2013 ஐ கோவா மாநிலம் செயல்படுத்தியுள்ளது. இதன்படி 5 கிலோ அரிசி அல்லது கோதுமை சலுகை விலையில் ஒவ்வொரு ரேசன் அட்டைதாரருக்கும் வழங்கப்படும்.

❖ ஆந்திரபிரதேசம், சட்டிஷ்கர், கோவா, ஜம்மு காஷ்மீர், கேரளா மற்றும் கர்நாடகா மாநிலங்களில் மொத்தம் **ஆறு புதிய ஐ.ஐ.டி களை** உருவாக்க மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

❖ இந்தியாவின் மிகப்பெரிய வனவிலங்கு பாதுகாப்பு மையம் நாக்பூரில் அமையவுள்ளது.

## சர்வதேச நிகழ்வுகள்

❖ உலகை அச்சுறுத்தும் **பருவநிலை மாற்றம் தொடர்பான ஐ.நா.வின் 21-ஆவது உச்சி மாநாடு, பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் திங்கள்கிழமை (30-11-2015) தொடங்கியது.** புவி வெப்பமாதல் சராசரியாக 2 டிகிரி செல்சியஸுக்கும் அதிகமாக இருந்தால் அது எதிர்காலத்தில் பேரழிவை ஏற்படுத்தும் எனவும், மீண்டும் சரி செய்ய முடியாத மோசமான நிலையை பூமி அடையும் எனவும்

விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். இந்த நிலையில், தொழிற்புரட்சிக்கு முன்னர் இருந்ததைப் போல, புவி வெப்பமாதலில் சராசரி அளவை 2 டிகிரி செல்சியஸைவிடக் குறைவானதாக்க ஐ.நா. இலக்கு நிர்ணயித்துள்ளது. மாநாட்டின் தலைவர் பிரான்ஸ் வெளியுறவுத் துறை அமைச்சர் லாரன் ஃபேபியஸ் ஆவர்.

❖ உலக வர்த்தக அமைப்பின் (WTO) 164 வது உறுப்பினராக ஆப்கானிஸ்தான் இணைந்துள்ளது.

❖ பயங்கரவாதத்துக்கு எதிராக அமைக்கப்படும் 34 நாடுகளைக் கொண்ட **"இஸ்லாமியக் கூட்டணி**"யில் தாங்கள் இடம் பெற்றிருப்பதாக சவூதி அரேபியா அறிவித்துள்ளதை பாகிஸ்தான் மறுத்துள்ளது.

❖ **சவூதி வரலாற்றில் முதல் முறையாகப் பெண்கள் அந்தத் தேர்தலில் பங்கேற்றனர்.** அவர்கள் வாக்களித்ததுடன், உள்ளாட்சி அமைப்புகளில் கவுன்சிலர் பதவிக்காகப் பெண் வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.இதில் 13 பெண் வேட்பாளர்கள் வெற்றி பெற்றதாக சவூதி தேர்தல் ஆணையர் ஒசாமா அல்-பார் அறிவித்தார்.

❖ இலங்கை போர்க்குற்றம் தொடர் பான ஜெனீவா தீர்மானம் எவ்வாறு அமல்படுத்தப்படுகிறது என்பது குறித்து ஆய்வு செய்ய ஐ.நா பொதுச் செயலர் **பான் கீ- மூன்**, ஐ.நா. மனித உரிமைகள் ஆணைய தலைவர் **ஜெய்ட் ராட் அல் உசேன்** தலைமையிலான ஐ.நா. உயர் நிலை குழு அடுத்த ஆண்டு தொடக்கத்தில் இலங்கையில் சுற்றுப் பயணம் மேற்கொள்ள உள்ளது.

❖ இணைய சமநிலை வழக்கின் முடிவை தீர்மானிக்கும் இந்திய வம்சாவளி நீதிபதி : இணையத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் முக்கிய தீர்ப்பை எழுதும் அதிகாரம் படைத்த அமெரிக்க மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மூன்று நீதிபதிகளுள் ஒருவராக **இந்திய வம்சாவளி அமெரிக்க நீதிபதி ஸ்ரீநிவாசன்** இடம்பெற்றுள்ளார்.

❖ **Brazil-Russia-India-China-South Africa (BRICS) அமைப்பின் முதல் ஊடகங்களின் கூடுகை** சீனாவில் 01-12-2015 அன்று நடைபெற்றது.

❖ **தண்ணீர் பொருளாதாரம்** : ஒரு நாட்டின் பொருளாதாரத்தை பணத்தைக் கொண்டு மதிப்பிடுவது போல தண்ணீரைக் கொண்டு மதிப்பிடுவதுதான்

தண்ணீர் பொருளாதாரம். இதை கண்டுபிடித்தவர் இங்கிலாந்தைச் சேர்ந்த ஜான் ஆண்டனி ஆலன் என்பவர்.

❖ சிரியா நாட்டு அதிபர் - **அல்-அஸாத்**

❖ உலக வர்த்தக நிறுவனத்தின் (WTO) 162 உறுப்பு நாடுகளின் வர்த்தக அமைச்சர்களின் கூடுகை கென்யாவின் தலைநகரான **நைரோபியில்** டிசம்பர் 15-18 வரை நடைபெற்றது. **2013 ஆம் ஆண்டு டிசம்பரில் பாலி** எனுமிடத்தில் இதுபோன்ற கூடுகை நடைபெற்றது.

❖ **"அமெரிக்காவுக்குள் முஸ்லிம்கள் நுழைவதற்குத் தடை விதிக்க வேண்டும்'** என அந்த நாட்டு அதிபர் பதவி வேட்பாளர் தேர்வுக்குப் போட்டியிடும் **டொனால்டு டிரம்ப்** கூறிய கருத்துக்கு எதிர்ப்பு வலுத்து வருகிறது.

❖ **தஜிகிஸ்தான் தலைநகர் துஷான்பேவுக்கு** கிழக்கே 345 கி.மீ. தொலைவில் மக்கள் அதிகம் வசிக்காத பகுதியில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த **நிலநடுக்கம்** ரிக்டர் அளவு கோளில் 7.1 ஆக பதிவானது. இதையடுத்து இந்தியாவின் வடமாநிலங்களிலும் லேசான நில அதிர்வு உணரப்பட்டது.

❖ **பிலிப்பின்ஸில் "மெலார்' புயல்** காரணமாக, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அந்த நாட்டின் மையப் பகுதியிலிருந்து 7 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் பாதுகாப்பான பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

❖ மேற்கு ஆப்பிரிக்காவைச் சேர்ந்த **காம்பியா, இஸ்லாமிய நாடு** என அதன் அதிபர் யாஹியா ஜாமே அறிவித்தார். பிரிட்டனின் காலனியாக இருந்த காம்பியா, 1965-இல் சுதந்திரம் பெற்றது. சுமார் 18.8 லட்சம் மக்கள்தொகை கொண்ட அந்த நாட்டில், ஏறத்தாழ 90 சதவீதம் பேர் முஸ்லிம்கள். கிறிஸ்தவர்கள் சுமார் 8 சதவீதத்தினர். ஏனையோர் பழங்குடியினர்.

❖ **நைரோபியில்** செவ்வாய்க்கிழமை டிசம்பர் 15 ல் **உலக வர்த்தக அமைப்பின் மாநாடு நடைபெற்றது.**

❖ தென்னாப்பிரிக்காவின் நிதித் துறை அமைச்சராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த **பிரவீண் கோவர்த்தன்** நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான அறிவிப்பை அந்நாட்டு அதிபர் ஜேக்கப் ஜூமா வெளியிட்டுள்ளார்.

❖ **சீக்கிய ராணுவ வீரர் டர்பன் அணிய வும், தாடி வைத்துக் கொள்ளவும் அமெரிக்க ராணுவம் தற்காலிக அனுமதி அளித்துள்ளது.**

❖ **ஷாஹீன் 1-ஏ ஏவுகணை**யை பாகிஸ்தான் நேற்று வெற்றிகரமாக ஏவி பரிசோதித்தது.

❖ மெர்ஸ் வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டு 7 மாதங்களுக்குப் பிறகு, அது முற்றிலுமாக அழிக்கப்பட்டுவிட்டது என்று தென்கொரிய சுகாதாரத் துறை அதிகாரிகள் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளனர்.

❖ உலகின் பிரபலமானவர்கள் பட்டியல் : பிரிட்டனைச் சேர்ந்த ஓஆர்பி இன்டர்நேஷனல் என்ற அமைப்பு நடத்திய கருத்துக் கணிப்பில், உலக அளவில் மிகவும் பிரபலமான தலைவராக அமெரிக்க அதிபர் ஒபாமா இருக்கிறார்.அவரைத் தொடர்ந்து, இரண்டாவது இடத்தில் ஜெர்மன் பிரதமர் ஏஞ்சலா மெர்க்கலும், மூன்றாவது இடத்தில் பிரிட்டன் பிரதமர் டேவிட் கேமரூனும் உள்ளனர். அதற்கு அடுத்தபடியாக, நான்காவது இடத்தில் பிரான்ஸ் அதிபர் பிரான்சுவா ஹொலாந்தும், ஐந்தாவது இடத்தில் ரஷிய அதிபர் விளாதிமிர் புதினும், ஆறாவது இடத்தில் சீன அதிபர் ஜீ ஜின்பிங்கும் உள்ளனர்.இந்தியப் **பிரதமர் நரேந்திர மோடி ஏழாவது இடத்தில் இருக்கிறார்**

❖ முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட **சோமாலியாவில் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நிகழ்ச்சிகளுக்கு அந்த நாட்டு அரசு தடை விதித்துள்ளது.**

❖ **ஜப்பானில், செயல்பாடுகள் நிறுத்தி வைக்கப்பட்ட இரு அணு உலைகளை மீண்டும் இயக்க அந்த நாட்டு நீதிமன்றம் அனுமதி வழங்கியது.** தனது மின்சாரத் தேவைக்கு அணுசக்தியையே பெருமளவில் சார்ந்திருந்த ஜப்பான், 2011-ஆம் ஆண்டு ஃபுகுஷிமா அணு உலை விபத்துக்குப் பிறகு அனைத்து அணுமின் நிலையங்களையும் மூடியது. இந்த நிலையில், பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஜப்பானின் 43 அணு உலைகளில் இரண்டு மட்டும் அண்மையில் இயக்கப்பட்டன.

❖ உலகிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட சீன நாட்டில், வரும் புத்தாண்டு முதல் தம்பதியர்கள் இரு குழந்தைகளை பெற்றுக் கொள்ளுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

❖ உலக அதிசயங்களில் ஒன்றான 'ஈபிள் கோபுரம்' சமூக இணைய தளமான ட்விட்டரில் இணைந் துள்ளது. இதற்கு தாஜ் மஹால், சுதந்திரதேவி சிலை ஆகியவற் றின் சார்பில் வாழ்த்து தெரிவிக்கப் பட்டுள்ளது. கஸ்டவ் ஈபிள் என்ற கட்டிடக் கலை வல்லுநரால் 126 ஆண்டு களுக்கு முன்பு உருவாக்கப்பட்ட ஈபிள் கோபுரம் சார்பில், @LaTourEiffel என்ற பெயரில் ட்விட்ட ரில் புதிய பக்கம் தொடங்கப் பட்டுள்ளது. "கடந்த 1889-ம் ஆண்டில் பிறந்த பிரான்ஸின் பாரீஸ் நகரவாசியான நான் இப்போது ட்விட்டரில் இணைந் துள்ளேன்" என 'லா கிராண்ட் டேம்' என்ற புனைப்பெயரால் அழைக்கப்படும் ஈபிள் கோபுரத்தின் முதல் பதிவில் கூறப்பட்டுள்ளது.

❖ **ஆசியாவின் மிகப்பெரிய சுரங்க ரயில் நிலையம்** சீனாவின் சென்ஜென் நகரில் கட்டப்பட்டுள் ளது.

❖ மேற்கு ஆப்பிரிக்க நாடான காம்பியா இஸ்லாமிய நாடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

❖ சீனா, அமெரிக்கா நாடுகளுக்கு அடுத்தபடியாக, **உலகிலேயே மூன்றாவது அதிக அளவு பாஸ்போர்ட்களை வழங்கிய நாடு** எனும் பெருமையை இந்தியா பெற்றுள்ளது.

❖ ஸ்பெயின் நாட்டின் புதிய பிரதமராக **மரியானோ ராஜோய்** தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார்.

❖ **நவம்பர் 5 ஐ உலக சுனாமி விழிப்புணர்வு நாளாக** ஐக்கிய நாடுகளவை அறிவித்துள்ளது.

❖ 68வது ஐக்கிய நாடுகளவையின் பொது சபை 2016 ஆம் ஆண்டை **தானியங்களின் ஆண்டாக (year of pulses)** அறிவித்துள்ளது.

❖ **இரண்டாவது உலக இணையதள கூடுகை** சீனாவின் ஊசென் நகரில் நடைபெற்றது

## முக்கிய நியமனங்கள்

❖ **மத்திய நேரடி வரிகள் வாரியத் தலைவராக** வருவாய்த் துறை மூத்த அதிகாரியான **ஏ.கே.ஜெயின்** நியமிக்கப்பட்டார்.

❖ **உச்ச நீதிமன்றத்தின் 43வது தலைமை நீதிபதி யாக தலைமை நீதிபதியாக டி.எஸ்.தாக்கூர்** பதவியேற்றுக் கொண்டார்.

❖ காமன்வெல்த் குற்றவியல் நடுவர்கள் மற்றும் நீதிபதிகளுக்கான சங்க பிராந்திய துணைத் தலைவராக **சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி பி.ராஜேந்திரன்** நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ அமெரிக்காவின் ஒஹையோ மாகாண அரசவைக் கவிஞராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மருத்துவர் **அமித் மஜும்தார்** நியமிக்கப்பட்டார்.

❖ ஐநா சபையின் பசி இல்லா சமுதாய திட்ட ஆராய்ச்சிக் குழுவில் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன முதன்மை விஞ்ஞானி பரசுராமன் நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ **ராயல் சொசைட்டியின் தலைவராக இந்திய அமெரிக்க விஞ்ஞானி சர்.வெங்கட்ராமன் ராமகிருட்டினன்** நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ **மத்திய நேரடி வரிகள் வாரியத்தின் தலைவர்** - அருண் குமார் ஜெயின்

## விருதுகள் / மரியாதைகள்

❖ பிரபல வயலின் கலைஞர் **எல்.சுப்ரமணியனுக்கு சங்கீத சம்மன் விருது** வழங்கப்படவுள்ளது

❖ நிகழாண்டின் சிறந்த மனிதராக, **ஜெர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்க்கலை,** அமெரிக்காவில் இருந்து வெளியாகும் "டைம்' ஆங்கிலப் பத்திரிகை தேர்வு செய்துள்ளது

❖ பாலிவுட் சினிமாவின் அடையாள மாகத் திகழும் **பழம்பெரும் நடிகர் திலீப் குமாருக்கு நாட்டின் உயரிய பத்மவிபூஷண் விருது** வழங்கப்பட்டது.

❖ **உலக தமிழ்ச் சாதனையாளர் விருது** : மலேசியா தமிழ்ச் சங்கம், சென்னை தமிழ்ச் சங்கம் ஆகியவை இணைந்து மகாகவி பாரதியார் பிறந்தநாள் விழா மலேசியாவின் ஈப்போ நகரில் நடைபெற்றது. இந்த விழாவின் ஒரு பகுதியாக தமிழ்ச் சேவையாற்றி வரும் தில்லி தமிழ்ச் சங்க தலைவர் வி.பாலசுப்ரமணியன், பொதுச் செயலாளர் என்.கண்ணன், அகில இந்திய தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு பொதுச்செயலாளர் இரா.முகுந்தன், நவிமும்பை தமிழ்ச் சங்க செயலாளர் மகாதேவன் ஆகியோருக்கு உலக தமிழ்ச் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

❖ சர்வதேச மனித உரிமை ஆணையம் வழங்கும் '**அமைதியின் தூதுவர்**' விருது போபாலைச் சேர்ந்த கத்தோலிக்க பேராயர் லியோ கொர்னிலியோவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

❖ 51 வது **ஜனபீட விருது** குஜராத் நாவலாசிரியர் மற்றும் கவிஞர் **ரகுவீர் சவுத்திரிக்கு** வழங்கப்பட்டுள்ளது.

❖ குடியரசுத் தலைவர் மாளிகையில் மிகச்சிறந்த புதுமையான திட்டங்களை அமல்படுத்தியதற்காக **பிரணாப் முகர்ஜிக்கு சிறந்த உலகத் தலைவர் விருது வழங்கப்பட்டது.** வெளிப்படையான புதிய திட்டங்களை செயல்படுத்தும் உலகத் தலைவர்களில் சிறந்த ஒருவரை தேர்வு செய்து கார்வுட் விருது வழங்கப்படுகிறது. அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள யு.சி. பெர்க்லி ஹாஸ் ஸ்கூல் ஆப் பிசினஸ் இந்த விருதை வழங்குகிறது.

❖ **இந்த ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருதுக்கு, கட்டுரைகள் பிரிவில் மூத்த தமிழ் எழுத்தாளர் ஆ.மாதவன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.** '**இலக்கியச் சுவடுகள்**' **என்ற கட்டுரைத் தொகுப்புக்காக** இந்த விருது அவருக்கு கிடைத்துள்ளது. மூத்த தமிழ் எழுத்தாளர்களில் ஒருவரான ஆ.மாதவன் திருவனந்தபுரத்தில் வசித்து வருகிறார். பத்தாம் வகுப்பைக்கூட தாண்டாத அவர், பள்ளிப் படிப்பை மலையாளத்தில்தான் பயின்றார். தமிழ் மொழியை தன் வீட்டில்தான் கற்றுக் கொண்டார்.

'**சின்ன ஜானகிராமன்**' என அழைக்கப்படும் ஆ.மாதவன், முரசொலி, தென்றல், பொன்னி, முல்லை, முத்தாரம், தினமணி கதிர், தீபம், கணையாழி, தாமரை என பல்வேறு இதழ்களில் 500-க்கும் மேற்பட்ட சிறுகதைகளையும், குறுநாவல்களையும் எழுதியுள்ளார். தமது பாத்திரக் கடை அமைந்திருந்த திருவனந்தபுரம் சாலை கடைத்தெருவில் நடமாடிய மனிதர்களையே தனது பெரும்பாலான படைப்புகளில் பாத்திரங்களாக சித்தரித்தார்.

அவரது '**கிருஷ்ணப் பருந்து**' நாவல் மிகுந்த வரவேற்பை பெற்றது. '**தூவானம்**' நாவலும் பலரால் வாசிக்கப் பட்ட ஒன்று. '**கடைத்தெரு கதைகள்**', '**ஆ.மாதவன் கதைகள்**' உள்ளிட்டவை இவரது முக்கிய தொகுப்புகளாகும்.

❖ **அன்னை தெரசாவிற்கு புனிதர் பட்டம்** வழங்கப்படுவதாக போப் பிரான்சிஸ் அறிவித்துள்ளார். அவருக்கான இந்த புனிதர் பட்ட 2016ம் ஆண்டு



www.tnpscportal.in

செப்டம்பர் 24ம் தேதி, வழங்கப்பட உள்ளதாகவும் கத்தோலிக்க செய்தித்தாள் செய்தி வெளியிட்டு உள்ளது.

○ யூகோஸ்லாவியா நாட்டில் ஸ்கோப்ஜி என்ற சிறு கிராமத்தில் ஓர் எளிய குடும்பத்தில் பிறந்தவர் தெரசா. பிறந்தது 1910-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27-ஆம் நாள். இளம்வயதிலேயே தந்தையை இழந்தவர். தாயால் வளர்க்கப்பட்டவர். 1929-ல் இந்தியாவிற்கு வந்தார். லோரட்டோ மடத்தின் கொல்கத்தா கிளையில் இருந்து கொண்டு பள்ளிக்கூடமொன்றில் ஆசிரியையாகப் பணியாற்றினார். ஆதரவற்ற முதியோர்களுக்கு அடைக்கலம் தந்திருக்கிறார். தொழு நோயாளிகளுக்கு என்று `ப்ரேம் நிவாஸ்' இல்லம் தொடங்கினார்.

○ மத்திய அரசு அன்னை தெரசாவிற்கு 1980-ல் `பாரத ரத்னா' விருது வழங்கிக் கவுரவித்தது. அன்னை தெரசாவின் பணியைப் போற்றும் விதமாய் உலக அமைதிக்கான நோபல் பரிசு (1979) வழங்கப்பட்டது.

○ மற்றவர்களின் நலனுக்காகவே செலவிட்ட அன்னை 1997-ஆம் ஆண்டு செப்டம்பர் 5ஆம் நாள் மரணமடைந்தார். 1962-ல் பத்மஸ்ரீ விருது, 1962-ல் பிலிப்பைன்ஸ் நாட்டின் மிக உயர்ந்த விருதான `ராமோன் மக்ஸேஸே' விருது, 1971-ல் போப் ஆண்டவரின் உலக சமாதானப் பரிசு, அமெரிக்காவின் `நல்ல சாமரித்தான்' விருது, 1972-ல் சர்வதேச நேரு சமாதானப் பரிசு, 1976-ல் சாந்தி நிகேதனில் டாக்டர் பட்டம் இவை அன்னை பெற்ற விருதுகளில் குறிப்பிடத்தக்கவை.

❖ பாதுகாப்புத் துறை முன்னாள் செயலாளர் **ஆர்.கே. மாத்தூர் தலைமை தகவல் ஆணையராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.** இதற்கு முன்பு தலைமை தகவல் ஆணையராக பணியாற்றிய விஜய் சர்மா கடந்த டிசம்பர் 1-ம் தேதி ஓய்வு பெற்றார்.

❖ சுதந்திரப் போராட்ட வீரர் அழகு முத்துகோன், ஹிந்தி புதுயுக கவிஞர் சுமித்ரா நந்தன் பந்த் ஆகியோரை கௌரவித்து, நினைவு கூரும் அஞ்சல் தலைகள், உறைகள், விவரக் குறிப்பேடுகளும் வெளியிடப்பட உள்ளன.

○ **சுமித்ரா நந்தன் பந்த்:** ஹிந்தி புதுயுக கவிஞர், எழுத்தாளர், நாடக ஆசிரியர் உள்ளிட்ட பன்முகத் திறன் கொண்டவர் சுமித்ரா நந்தன் பந்த். 1968-இல் முதலாவதாக ஞானபீட விருது பெற்ற முதல் ஹிந்தி கவிஞர் ஆவார்.

○ **அழகு முத்துக்கோன்:** சுதந்திரத்துக்காகப் போராடியவர் மாவீரன் அழகுமுத்துக்கோன். ஜெகவீர ராமபாண்டி எட்டப்பன் என்கிற எட்டயபுரம் அரசருக்கு நண்பராக இருந்தவர். கப்பம் கட்ட மறுத்து, முதலாவதாக ஆங்கிலேயர்களை எதிர்த்தவர். மருதநாயகம் யூசுப்கான் சாகிப்பை எதிர்த்து, பெத்தநாயக்கனூர் கோட்டையில் போரிட்ட அழகுமுத்து கோன், படைத் தளபதிகள், போர் வீரர்கள் பீரங்கியால் சுடப்பட்டனர்.

❖ குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த பிரபல எழுத்தாளர் **ரகுவீர் சௌதரி இந்த ஆண்டுக்கான ஞானபீட விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.**

○ இலக்கியத் துறையில் சிறந்து விளங்குவோரை கௌரவிக்கும் வகையில், ஞானபீட விருது வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டுக்கான 51-ஆவது ஞானபீட விருது, குஜராத்தி மொழியின் பிரபல எழுத்தாளர் ரகுவீர் சௌதரிக்கு வழங்கப்பட உள்ளது. "உபர்வாஸ்' என்னும் நாவலுக்காக, கடந்த 1977-ஆம் ஆண்டு, ரகுவீர் சௌதரிக்கு சாகித்ய அகாதெமி விருது வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.இவர் எழுதிய "அம்ரிதா", "வேணு வத்சலா', "உபர்வாஸ்' ஆகிய நாவல்கள், இந்திய இலக்கிய உலகின் முக்கிய படைப்புகளாக திகழ்கின்றன.

## முக்கிய தினங்கள்

❖ **உலக எயிட்ஸ் தினம் - டிசம்பர்** 1

❖ **சர்வதேச அடிமை முறை ஒழிப்பு தினம், உலக மாசுகட்டுப்பாடு தினம், உலக கணினி அறிவு தினம் - டிசம்பர்** 2

❖ **மாற்றுத் திறனாளிகள் தினம்-** டிசம்பர் 3 (2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் உள்ள மாற்றுத் திறனாளிகளில், தமிழகத்தில் மட்டுமே, ஆண்களை விட பெண்கள் அதிகம் உள்ளனர்.)

❖ **இந்திய கடற்படை தினம் - டிசம்பர்** 4

❖ **உலக மண் தினம்** - டிசம்பர் 5

❖ படை வீரர் கொடி நாள் - **டிசம்பர் 7**

❖ **சர்வதேச ஊழல் ஒழிப்புத்தினம் - டிசம்பர் 9.** (டிரான்ஸ்பரசி இண்டர்நேசனல் நிறுவனத்தின் 2014 ஆம் ஆண்டின் ஆய்வின்படி ஊழல் மிகுந்த நாடுகளின் பட்டியலில் இந்தியா 86 வது இடத்திலுள்ளது.)

❖ **சர்வதேச இனப்படுகொலை பாதிப்புக்குள்ளானோர் தினம் -டிசம்பர் 9**

❖ **மனித உரிமைகள் தினம் - டிசம்பர் 10**

❖ **சர்வதேச மலைகள் தினம் - டிசம்பர் 11**

❖ தேசிய எரிசக்தி சேமிப்பு நாள் -டிசம்பர் 14

❖ தேசிய மின் சிக்கன வாரம் - டிச.14ஆம் தேதி தொடங்கி 20ஆம் தேதி வரை

❖ பாலியல் தொழிலாளிகளுக்கெதிரான கொடுமைகள் ஒழிப்பு தினம் - டிசம்பர் 17

❖ **சர்வதேச புலம்பெர்ந்தோர் தினம் - டிசம்பர் 18**

❖ **வாஜ்பாய் பிறந்த தினம் -** டிசம்பர் 25

❖ **சர்வதேச உயிரியற் பல்வகைமை தினம் (bio-diversity day) - டிசம்பர் 29**

## அறிவியல் தொழில்நுட்பம்

❖ **UNFCCC** - United Nations Framework Convention on Climate Change

❖ **உலகிலேயே முதல் முறையாக சோதனைக் குழாய் மூலம் கருத்தரிக்கப்பட்ட 7 நாய்க் குட்டிகள்** அமெரிக்காவில் பிறந்துள்ளன. அமெரிக்காவின் கார்னெல் பல்கலைக்கழக கால்நடை மருத்துவத் துறையைச் சேர்ந்த விஞ்ஞானிகளின் முயற்சியில், சோதனைக் குழாயில் கருத்தரிப்பு செய்யப்பட்ட 7 வெவ்வேறு இனம் மற்றும் கலப்பின நாய்க்குட்டிகள் கடந்த ஜூலை மாதம் பிறந்தன.

❖ **‘எல் நினோ’ பருவநிலை மாற்றம் காரணமாக தென்னிந்தியாவில் சராசரியைவிட கூடுதல் மழை பெய்துள்ளது**, அடுத்த ஆண்டு பிப்ரவரி வரை மழை நீடிக்கலாம் என்று ஐ.நா. சபை ஆய்வறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது. **‘எல் நினோ’ என்பது** பூமியின் வெப்பநிலை ஏற்றத்தாழ்வை குறிப் பது ஆகும். உலகின் மிகப்பெரிய கடலான பசிபிக்

பெருங்கடலின் மேற்பரப்பில் நிலவும் வெப்ப நிலையின் ஏற்றத்தாழ்வை பொறுத்து எல் நினோவின் தாக்கம் கண்டறியப்படுகிறது. எல் நினோ ஏற்படும்போது ஒருபுறம் அதிக மழையும் மறுபுறம் கடும் வறட்சியும் நிலவும். குறிப்பாக தென்னிந்தியா, இலங்கை, மாலத்தீவில் சராசரியை விட கூடுதல் மழைப்பொழிவு இருக்கும். இந்த மழைப்பொழிவு 2015 டிசம்பர் முதல் அடுத்த ஆண்டு பிப்ரவரி வரை நீடிக்கக்கூடும். இதற்கு நேர்மாறாக பசிபிக் கடலில் பப்புவா நியூ கினியா, திமோர்-லெஸ்டி உள்ளிட்ட பகுதிகளில் வெப்பம் அதிகரித்து கடும் வறட்சி ஏற்படும்.

❖ புவி வெப்பநிலை உயர்வை 2 டிகிரி செல்சியஸுக்கு மிகாமல் கட்டுப் படுத்த வேண்டும் என்று பாரீஸில் நடைபெற்ற ஐ.நா. மாநாட்டில் ஒப்பந்தம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

❖ **பூமியின் சராசரி வெப்பநிலை** : ஈரான் நாட்டின் லட் பாலைவனத்தில் மிக அதிகபட்சமாக 70.7 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை பதிவாகிறது. மிக குறைந்தபட்சமாக ரஷ்யாவின் அன்டார்டிகா பகுதியில் உள்ள வோஸ்டாக் ஆராய்ச்சி மையத்தில் மைனஸ் 89.2 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை பதிவாகிறது. கடல், நிலம், மலை, பனிப்பிரதேசம் என அனைத்தையும் கணக்கில் கொண்டு பூமியின் சராசரி வெப்பநிலை 14 டிகிரி செல்சியஸ் முதல் 16 டிகிரி செல்சியஸாக கணக்கிடப்படுகிறது.

❖ கடல் நீர்மட்டம் அதிகரித்து வருவதால் **பூமி சுற்றும் வேகம் குறைந்து வருவதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்**. இவ்வாறு பூமி மெதுவாகச் சுழல்வதால் ஒரு நாளின் நீளம் அதிகரிக்கும் என்றும் கூறியுள்ள கனடாவின் அல்பெர்டா பல்கலைகழக பேராசிரியர், மேத்யூ டம்பெரி அடுத்த நூற்றாண்டிற்குள், ஒரு நாள் பொழுதில், 1.7 மில்லி நொடிகள் நீளும் என்று கூறியுள்ளார்.

❖ **இஸ்ரோவின் 50-வது ராக்கெட் பிஎஸ்எல்வி சி29** வெற்றிகரமாக ஏவப்பட்டது. சிங்கப்பூரின் 6 செயற்கைக் கோள்களுடன் இஸ்ரோவின் 50-வது ராக்கெட்டான பிஎஸ்எல்வி சி29 நேற்று மாலை 6 மணிக்கு வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது. இவற்றில் 'டெலியோஸ்-1' (TeLEOS-1) என்பதுதான் முதன்மை செயற்கைக் கோள். 400 கிலோ எடை கொண்ட இது, தொலைஉணர்வு பயன்பாட்டுக்கானது. மற்ற 5 செயற்கைக் கோள்களில் 2

www.tnpscportal.in

சிறியவை (மைக்ரோ சாட்டிலைட்), 3 மிகச்சிறியவை (நானோ சாட்டிலைட்) ஆகும். இந்த 6 செயற்கைக் கோள்களும் 550 கி.மீ. தொலைவில் புவி சுற்றுவட்டப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டன. இந்த செயற்கைக்கோள்களின் ஆயுட்காலம் 5 ஆண்டுகள் ஆகும். இவை பூமி ஆராய்ச்சி, சுற்றுச் சூழல், பேரிடர் கண்காணிப்பு, கடலோர கண்காணிப்பு, நகர திட்டமிடல், உள்நாட்டு பாதுகாப்பு ஆகிய பணிகளுக்குப் பயன்படும்.

❖ **இந்திரா நேவி** எனப்படும் இந்திய -ரஷிய நாடுகளுக்கிடையேயான எட்டாவது கூட்டு கடற்படை பயிற்சி விசாகப்பட்டணத்தில் நடைபெற்றது.

❖ " பாரீஸ் ஐ.நா. மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பருவநிலை மாறுபாடு ஒப்பந்தம் உலக மக்களுக்கு கிடைத்த மாபெரும் வெற்றி. இந்த ஒப்பந்தம் பூமிக்கான மருத்துவக் காப்பீடு ஆகும்." என ஐ.நா. பொதுச்செயலாளர் **பான் கி-மூன்** தெரிவித்துள்ளார்.

❖ ரஷ்யா, அமெரிக்கா, பிரிட்டனை சேர்ந்த 3 விண்வெளி வீரர்கள் நேற்று கஜகஸ்தான் பைகானூர் விண்வெளி மையத்தில் இருந்து **சோயுஷ் ரஷ்ய ஏவுகணை** மூலம் **சர்வதேச விண்வெளி மையத்துக்கு சென்றனர்.** அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பிய யூனியன், ஜப்பான் உள்ளிட்ட 11 நாடுகள் இணைந்து விண்வெளியில் சர்வதேச ஆய்வு மையத்தை அமைத்துள்ளன. கடந்த 1998 நவம்பர் 20-ம் தேதி முதல் இந்த ஆய்வு மையம் செயல்பட்டு வருகிறது. கடந்த 2003-ம் ஆண்டில் அமெரிக்காவின் கொலம்பியா விண்கலம் வெடித்துச் சிதறியதில் இந்திய வம்சாவளி விண்வெளி வீரர் கல்பனா சாவ்லா உட்பட 7 பேர் உயிரிழந்தனர்.

❖ **சீனாவில்** தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று, **வானிலை அறிக்கைகளை வாசிப்பதற்காக இயந்திரப் பெண்ணை (ரோபோ) நியமித்துள்ளது.** "ஜியோஜஸ்' எனப் பெயரிடப்பட்டுள்ள அந்தப் பெண், ""குளிர்காலத்தின் இடையில் எனது பணியைத் தொடங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்" என்று கூறி, "ஷாங்காய் டிராகன்' தொலைக்காட்சியில் கடந்த செவ்வாய்க்கிழமை தனது தொலைக்காட்சிப் பணியைத் தொடங்கியது.

❖ விவேகானந்தரின் 153 வது பிறந்த நாளை முன்னிட்டு **'தேசிய இளைஞர் விழா'** ஜனவரி 16 , 2016 ல் சட்டிஷ்கர் மாநிலத்தில் நடைபெறவுள்ளது.

www.tnpscportal.in

❖ *அடுத்த ஆண்டில் (2016) நாட்டில் இணையதளம் உபயோகிப்போர் எண்ணிக்கை 50 கோடியை* எட்டும் என்று மத்திய தகவல் தொடர்புத் துறை அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் தெரிவித்தார். **இந்தியாவில் தற்போது இணையதள வாடிக்கையாளர் களின் எண்ணிக்கை 40 கோடி யாக உள்ளது**

❖ வானில் நீண்ட தொலைவு சென்று இலக்கைத் தாக்கும் திறன் கொண்ட, இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான **"பராக்-8' ஏவுகணை** புதன்கிழமை வெற்றிகரமாக ஏவப்பட்டு, சோதிக்கப்பட்டது. இந்தியாவும், இஸ்ரேலும் இணைந்து தயாரித்த இந்த பராக்-8 ஏவுகணையானது பல நவீன தொழில்நுட்பங்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்டதாகும். இந்த ஏவுகணையில் பொருத்தப்பட்ட அதிநவீன ரேடார் கருவி மூலம் எதிரியின் இலக்கைத் துல்லியமாகக் கண்டறிந்து தாக்க முடிவதுடன், எதிரி நாட்டு விமானங்கள் குறித்த எச்சரிக்கையையும் பெற முடியும்.

- ❖ **முதல் இந்தியா-சர்வதேச அறிவியல் திருவிழா** டிசம்பர் 4-8 வரை டில்லி ஐ.ஐ.டி யில் நடைபெற்றது.

## விளையாட்டுகள்

❖ **ஐசிசி தரவரிசையில் இந்திய சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின் 2வது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.** பேட்ஸ்மேன்கள் தரவரிசையில் தென் ஆப்பிரிக்காவின் டி வில்லி யர்ஸ் முதலிடத்தை இழந்தார். 856 புள்ளிகளுடன் அஸ்வின் 2வது இடத்திலும், **தென் ஆப்பிரிக்காவின் ஸ்டெயின் 884 புள்ளிகளுடன் முதலிடத்திலும்** உள்ளனர்.

❖ உலக ஸ்குவாஷ் தரவரிசைப் பட்டியலில் இந்தியாவின் **ஜோஷ்னா சின்னப்பா** 13ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

❖ சர்வதேச பாட்மிண்டன் தரவரிசையில் இந்தியாவின் **ஸ்ரீகாந்த்** ஓர் இடத்தை இழந்து 9-வது இடத்தைப் பிடித்துள்ளார்.

❖ உலக பாட்மிண்டன் சம்மேளனத்தின் சார்பில் வழங்கப்படும் ஆண்டின் சிறந்த வீராங்கனைக்கான விருதுக்கு இந்தியாவின் **சாய்னா நெவால்** பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

www.tnpscportal.in

❖ சர்வதேச பாட்மிண்டன் தரவரிசையில் இந்தியாவின் **ஸ்ரீகாந்த்** ஓர் இடத்தை இழந்து 9-வது இடத்தைப் பிடித்துள்ளார்.**அஜய் ஜெயராம்** இரு இடங்கள் முன்னேறி 23-வது இடத்தைப் பிடித்துள்ளார். **எச்.எஸ்.பிரணாய், காஷ்யப்** ஆகியோர் முறையே 20 மற்றும் 14-வது இடங்களை தக்கவைத்துக் கொண்டுள்ளனர். மக்காவ் ஓபனில் தொடர்ந்து 3-வது ஆண்டாக வென்றபோதிலும், **சிந்துவின்** தரவரிசையில் எந்த மாற்றமும் இல்லை. அவர் தொடர்ந்து 12-வது இடத்திலேயே உள்ளார். **சாய்னா** 2-வது இடத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ளார். மகளிர் இரட்டையர் தரவரிசையைப் பொறுத்தவரையில் இந்தியாவின் **ஜுவாலா கட்டா-அஸ்வினி பொன்னப்பா** ஜோடி ஓர் இடத்தை இழந்து 13-வது இடத்தைப் பிடித்துள்ளது.

❖ தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டிக்கான ஆட்ட நாயகன் விருதை ரஹானே பெற்றார். அவர் இந்த விருதை கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள சென்னை மக்களுக்கும் சென்னையில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள ராணுவ வீரர்களுக்கும் அர்ப்பணிப்பு செய்தார்.தொடர் நாயகன் விருதைப் பெற்ற அஸ்வினும் தனது விருதை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள சென்னை மக்களுக்கு அர்ப்பணிப்பு செய்தார்.

❖ **இந்தியன் சூப்பர் லீக்** (ஐஎஸ்எல்) கால்பந்து தொடரில் கோவா அணி 3-2 என்ற கோல் கணக்கில் தில்லி டைனமோஸ் அணியைத் தோற்கடித்தது

❖ **உலக ஹாக்கி லீக்** பைனல்ஸ் தொடரில் இந்தியா வெண்கலப் பதக்கம் வென்றது. கடந்த 33 ஆண்டுகளில் சர்வதேச அளவிலான பெரிய போட்டிகளில் இந்தியா வென்ற முதல் பதக்கம் இதுவாகும். இதற்கு முன்னர் 1982-ல் ஆம்ஸ்டர்டாமில் நடந்த சாம்பியன்ஸ் டிராபி போட்டியில் பாகிஸ்தானை வீழ்த்தி சாம்பியன் ஆனதே இந்தியா பெற்ற மிகப்பெரிய வெற்றியாகும்.

❖ **ஐசிசி டெஸ்ட் தரவரிசையில் 2-வது இடத்துக்கு முன்னேறியுள்ளது** இந்திய அணி.சர்வதேச தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 3-0 என்ற கணக்கில் கைப்பற்றியதன் மூலம் 4-வது இடத்திலிருந்து 2-வது இடத்துக்கு முன்னேறியிருக்கிறது இந்தியா. 2-வது இடத்தில் இருந்த ஆஸ்திரேலியா 3-வது

இடத்துக்கும், 3-வது இடத்தில் இருந்த பாகிஸ்தான் 4-வது இடத்துக்கும் தள்ளப்பட்டுள்ளன.

❖ ஐசிசி தரவரிசைப்பட்டியலில் இந்தி யாவின் ஜடேஜா 4 இடங்கள் முன் னேறி முதன்முறையாக **7வது இடத்தை பிடித்துள்ளார்.** ஆல்ரவுண் டர் வரிசையில் அஸ்வின் **முதலிடத்துக்கு** முன்னேறியுள்ளார்.

❖ **விஜய் ஹசாரே டிராபி** கிரிக்கெட் போட்டியில் **தமிழகம்** தனது முதல் ஆட்டத்தில் 6 விக்கெட் வித்தியாசத்தில் அசாம் அணியைத் தோற்கடித்தது

❖ 1990-ம் ஆண்டு பீஜிங் நகரில் நடைபெற்ற ஆசிய விளையாட்டு போட்டிகளில் **முதல் முதலாக கபடி ஆட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.** அதிலிருந்து இதுவரை நடைபெற்ற அனைத்து ஆசிய போட்டிகளிலும் இந்தியா தங்கப்பதக்கம் வென்றுள்ளது.

❖ லண்டன் செஸ் கிளாசிக் போட்டியில் நடப்பு உலக சாம்பியனான நார்வேயின் **மேக்னஸ் கார்ல்சன்** சாம்பியன் பட்டம் வென்றார். ஆனந்த் 3.5 புள்ளிகளுடன் 9-வது இடத்தைப் பிடித்தார்.

❖ **ஐசிசி டெஸ்ட் வீரர்களின் தரவரிசை பட்டியல்** வெளியிடப்பட்டுள்ளது. இதில் இந்தியாவின் அஸ்வின் ஆல்ரவுண்டர்கள் தரவரிசையில் முதலிடத்தில் உள்ளார். ரவீந்திர ஜடேஜா 5வது இடத்தை பிடித்துள்ளார். பேட்ஸ்மேன்களில் முதல் 10 இடங்களுக்குள் இந்திய வீரர்கள் யாரும் இடம்பெறவில்லை. பந்து வீச்சில் அஸ்வின் 2வது இடத்திலும், ஜடேஜா 8வது இடத்திலும் உள்ளனர். ஸ்டெயின் தொடர்ந்து முதலிடத்தை தக்கவைத்துக்கொண்டுள்ளார். பேட்ஸ்மேன்களில் நியூஸிலாந்தின் வில்லியம்சன் 2 இடங்கள் முன்னேறி 3வது இடத்தை பிடித்துள்ளார். முதலிடத்தில் இங்கிலாந்தின் ஜோரூட் நீடிக்கிறார்.

❖ அமெரிக்காவின் டைம்ஸ் பத்திரிகை குழுமத்தில் இருந்து வெளியாகும் "ஸ்போர்ட்ஸ் இல்லஸ்ட்ரேட்டட்' **இந்த ஆண்டின் விளையாட்டுத் துறையில் சிறந்த நபராக அமெரிக்க டென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியமஸ்** தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

❖ ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் ஆலோசகராக தமிழகத்தைச் சேர்ந்த முன்னாள் கிரிக்கெட் வீரர் **ஸ்ரீதரன் ஸ்ரீராம்** நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ டி 20 உலககோப்பையை முன்னிட்டு ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் பந்து வீச்சு பயிற்சியாளராக இந்திய முன்னாள் வீரர் மனோஜ் பிரபாகர் (52) நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ **2015-ம் ஆண்டுக்கான ஐசிசி கிரிக்கெட் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. விருதுகளின் பட்டியல்:**

- ஐசிசி இந்த ஆண்டுக்கான சிறந்த கிரிக்கெட் வீரர் - ஸ்டீவன் ஸ்மித்
- சிறந்த டெஸ்ட் கிரிக்கெட் வீரர் - ஸ்டீவன் ஸ்மித்
- சிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீரர் - ஏபி டி வில்லியர்ஸ்
- மகளிர் சிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீராங்கனை - மெக் லன்னிங்
- மகளிர் சிறந்த டி20 கிரிக்கெட் வீராங்கனை - ஸ்டெ.ஃபானி டெய்லர்
- சிறந்த டி20 ஆட்டம் - டு பிளெஸ்ஸி
- சிறந்த இளம் வீரர் - ஜோஸ் ஹேஸில்வுட்
- அசோசியேட் அணிகளின் சிறந்த கிரிக்கெட் வீரர் - குர்ரம் கான்
- விளையாட்டு உணர்வு விருது - பிரண்டன் மெக்கல்லம்
- சிறந்த நடுவர் - ரிச்சர்ட் கெட்டல்பரோ

❖ இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் விக்கெட் கீப்பர் **சையத் கிர்மானிக்கு இந்த ஆண்டுக்கான வாழ்நாள் சாதனையாளர் விருது** வழங்கப்படுவதாக பிசிசிஐ அறிவித்துள்ளது.

❖ **2015-ம் ஆண்டு அதிக விக்கெட்டுகள் வீழ்த்திய பவுலர் என்கிற பெருமையை அடைந்துள்ளார் அஸ்வின்.** 2004-ல் அனில் கும்ப்ளே, 74 விக்கெட்டுகள் எடுத்து முதலிடம் பெற்றார். அதன்பிறகு இந்தப் பெருமை அஸ்வினுக்குக் கிடைத்துள்ளது.

---



www.tnpscportal.in

www.tnpscportal.in இணையதளத்தில் போட்டித்தேர்வுகளுக்கான தினசரி நடப்பு நிகழ்வுகள் தொகுத்து வழங்கப்படுகின்றன.

**இந்த நடப்பு நிகழ்வுகள் பற்றிய உங்கள் கருத்துக்களை** mail@tnpscportal.in **ல் தெரிவியுங்கள்.**

**உங்கள் முயற்சிகளில் வெற்றிபெற வாழ்த்துக்கள் !**

www.tnpscportal.in